


தமிழ்நாடு மின்சார வாரிய 49–வது பொதுக்குழு கூட்டத்தில் மாநில பொது செயலாளர் அசோக்குமார் பேசினார். அருகில் மாநில தலைவர் அந்தோணி படோவராஜ், மாநில பொருளாளர் பத்ரி நாராயணன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

Scanned by CamScanner

# தமிழ்நாடு மின் வாரிய பொறியாளர் சங்க பொதுக்கூட்டம்

வேலூர், ஜூன் 13-
தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 49வது மாநில பொதுக்குழு கூட்டம் இன்று காலை வேலூர் காந்தி நகரில் உள்ள தனியார் மண்டபத்தில் நடந்தது. பொதுக் குழு கூட்டத்தில் பொறியாளர் சங்கத்தின் மாநில தலைவர் அந்தோனி படோவராஜ் தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் அசோக்குமார் முன்னிலை வகித்தார். பொறியாளர் பத்ரிநாராயணன் வரவேற்றார்.



தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்க மாநில பொதுக் குழு கூட்டத்தில் அதன் பொதுச்செயலாளர் அசோக்குமார் பேசினார்.

இக்கூட்டத்தில் மின் நுகர்வோர் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு அளிக்கும் சேவையில் புதிய செயல்முறைகளை பயன்படுத்துவது, மின் வாரியங்களில் பணிபுரியும் பட்டய பொறியாளர் நலன் குறித்தும், எதிர்காலத்தில் மின் வாரியத்தில் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு மற்றும் நலன் குறுத்தும், மின் வாரிய பிரிவுகள் அதிகப்படுத்துவது, அனைத்து மின்வாரிய பணியாளர்களுக்கு ஓய்வூதியம் தொடர்ந்து வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து மின் வாரிய சங்க மாநில பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது. இதன் முடிவுகள் நாளை நடைபெறும் 2ஆம் நாள் பொதுக்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட உள்ளது. ஏற்பாடுகளை வேலூர் கிளை அமைப்புச் செயலாளர் அருள்சரவணன், கோட்டச்செயலாளர் மணிகண்டன் ஆகியோர் செய்திருந்தனர். இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்தும் 100ம் மேற்பட்ட பொறியாளர்கள் கலந்துகொண்டனர்.

Scanned by CamScanner




கழிஞ்சூர் பி.டி.எம். மகாலில் நடைபெற்ற தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் மாநில பொதுக்குழு கூட்டத்தில் மாநில தலைவர் அந்தோணி படோவராஜ் பேசிய போது எடுத்தபடம். அருகில் மாநில பொதுச் செயலாளர் அசோக்குமார், மாநில பொருளாளர் பத்ரீ நாராயணன், அருள் சரவணன், மணிகண்டன் மற்றும் பலர் உள்ளனர்.

Scanned by CamScanner